# அழகக சங்கங்களின் சம்மேளனம்
## வட மாகாணம்
## Hairdressers Federation Association
## Northern Province

தலைமையகம்,
கிளிநொச்சி.

பதிவு இல :...................

திகதி :....../....../20.....


## கௌரவ அமைச்சர் பிமல் ரத்னாயக்க அவர்கள் வடமாகாணத்தில் உள்ள பாதுகாப்பு தரப்பினரால் நடாத்தப்படும் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் தொடர்பாக பாரளுமன்றத்தில் ஆற்றிய உரை தொடர்பான தெளிவுபடுத்தல்

இலங்கை நாட்டின் கௌரவ ஜனாதிபதி மற்றும் கௌரவ அமைச்சர்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், கௌரவ ஆளுனர் மற்றும் கௌரவ உள்ளூராட்சி மன்றத்தலைவர்கள் ஆகியோருக்கான தெளிவுபடுத்தல். என்னவெனில் வடமாகாண அழகக கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத்தின் ஆளுகைக்கு உட்பட்ட 5 மாவட்டங்களின் எல்லை பகுதிக்குள் அமைந்துள்ள இராணுவமுகாம், விஷேட அதிரடிப்படை முகாம், சிவில் பாதுகாப்புபடையணிமுகாம் பொலிஸ்நிலையம் சிறைச்சாலை ஆகிய பகுதிகளை அண்டிய அல்லது உள்ளடக்கிய பகுதிகளில் பாதுகாப்பு தரப்பினரால் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் நடாத்தப்படுவதாகவும் அதனால் எங்களது அங்கத்தவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதோடு எங்களது சங்க கட்டுப்பாடுகளும் மீறப்பட்ட செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதாக பல தடவைகள் அனைவருக்கும் கடிதம் மூலமாக சுட்டிக்காட்டியதோடு நேரடியாகவும் சந்தித்து கலந்துரையாடி குறித்த சிகை அலங்கரிப்பு நிலையங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுத்து ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொண்டிருந்தோம். அதற்கமைவாக யாழ்மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பகுதிகளில் உள்ள சில சிகை அலங்கரிப்பு நிலையங்கள் மூடப்பட்டிருந்தாலும் இன்றும் பல சிகை அலங்கரிப்பு நிலையங்கள் தொடர்ந்தும் இயங்கி வரும் நிலையில் கௌரவ அமைச்சர் பிமல் ரத்னாயக்க அவர்கள் நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் வட மாகாணத்திலேயே வன்னி பகுதியில் மட்டும் ஒரே ஒரு சிகை அலங்கரிப்பு நிலையம் மட்டுமே இயங்கி வருவதாகவும் இதனை நாங்கள் அல்லது எங்களது பிரச்சனைகள் தொடர்பாக பாராளுமன்றத்திலே கேள்வி எழுப்பிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களாகிய (திரு.சிவஞானம் சிறிதரன், திரு.செல்வம் அடைக்கலநாதன்) ஆகியோர் தாங்கள் அரசியல் செய்வதற்காக பொய் கூறுவதாகவும் இதற்கான பொய்யான தகவல்களை நாங்கள் வழங்குகின்றோம் என்ற அடிப்படையில் முழு பூசணிக்காயை சோற்றில் புதைப்பது போன்ற வடிவில் அவரது குற்றம் சாட்டப்பட்ட உரையானது அமைந்திருப்பது எங்களது அங்கத்தவர்கள் அவர்கள் சார்ந்த உறவுகளையும் மிகுந்த மன உழைச்சலுக்கு உள்ளாக்கி உள்ளது.

என்பதையும் தங்கள் அனைவருக்கும் தெளிவு படுத்துவதோடு இவ்வாறான பதிலுரைகளை ஆற்றும் போது சம்மந்தப்பட்ட தரப்புக்களினன் தரவுகளை சரியான முறையில் பெற்று பதிலுரை வழங்கும் பொழுது பாதிக்கப்பட்ட எங்களது பிரச்சினைகளும் சுமூகமாக தீர்க்கப்படுமென திடமாக நம்புகிறோம். இன்றும் தொடர்ந்து இயங்கி வருகின்ற சிகை அலங்கரிப்பு நிலையங்கள் எந்த மாவட்டத்தில் எந்த பிரதேசத்தில் எந்த பாதுகாப்பு பிரிவினரால் செய்யப்படுகின்றது என்ற விபரங்களை மீண்டும் தெளிவாக இணைத்துள்ளோம். எனவே இவையனைத்தையும் மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு தங்களை தயவுடன் கேட்டுநிற்கின்றோம்.

**வடமாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் பாதுகாப்பு தரப்பினரால் நடாத்தப்படுகின்ற சிகை அலங்கரிப்பு நிலையங்களின் விபரம்**

**யாழ் மாவட்டம்**

1. காங்கேசன்துறை தொண்டமனாறு வீதியல் அமைந்துள்ள இராணுவ முகாமில்

**வவுனியா மாவட்டம்**

1. பம்பை மடு இராணுவமுகாம்
2. வவுனியா சிறைச்சாலைக்கு முன்பாக
3. இரட்டை பெரிய குளம் இராணுவ முகாம்
4. பரச்சங்குளம் இராணுவமுகாம் மன்னார் வீதி வவுனியா

**கிளிநொச்சி மாவட்டம்**

1. சிவில் பாதுகாப்புத் திணைக்களம் இணைந்த கட்டளைத் தலைமையகம் விசுவமடு புன்னைநீராவியடி

**முல்லைத்தீவு மாவட்டம்**

1. கால்நடை பயிற்சி கல்லூரியடி இராணுவமுகாம் முருகண்டி
2. எரிபொருள் நிரப்பு நிலையம் அருகாமை இராணுவமுகாம் முருகண்டி
3. விஷேட படையணி இராணுவமுகாம் அக்கராயன் முருகண்டி
4. கோப்பாபுலவு கொண்டமடு வீதி 59ம் படைப்பிரிவிற்குள் 3 சிகை அலங்கரிப்பு நிலையங்கள்

**மன்னார் மாவட்டம்**

1. கள்ளியடி இலுப்பைக்கடவை மன்னார்
2. திருக்கேதீஸ்வரம் முள்ளிப்பள்ளம் மன்னார்

| | | |
|---|---|---|
| ஆ.உ.தயசங்கர் | பா.சர்மிலன் | வே.காண்டீபன் |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |

Hair Dressers Association Federation
Northern Province
19.11.2025